செ.வெ.எண்: 34 நாள்:12.07.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்,**
**மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் கோயம்புத்தூர் எஸ்.என்.ஆர் கலையரங்கத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.**

---

கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.என்.ஆர் கலையரங்கத்தில் இன்று(12.07.2021) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிக வரித்துறை ஆணையர் / முதன்மை செயலாளர் திரு.எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., வணிக வரித்துறை அரசு செயலாளர் திருமதி.ஜோதிநிர்மலசாமி இ.ஆ.ப., பத்திரபதிவுத்துறை தலைவர் திரு.அருள்சிவன் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சமீரன் இ.ஆ.ப., இணை ஆணையர்(மாநிலவரிகள்) திருமதி.மெர்சி ரம்யா இ.ஆ.ப., மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொதுமக்களுக்கு தூய்மையான மற்றும் வெளிப்படைத்தன்மையான நிர்வாகத்தினை வழங்குவதை உறுதி செய்திடும் வகையில், அனைத்து துறை அமைச்சர் பெருமக்களும் அவரவர் துறைகளில் மண்டலங்கள், மாவட்ட வாரியாக ஆய்வுக்கூட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இவ்ஆய்வுக்கூட்டங்களின் நோக்கம் மக்களின் எண்ணங்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்களின் கருத்துக்களை முழுமையாக கேட்டறிந்து அதற்குதகுந்தாற்போல் உரியமுறையில்

மக்களுக்கு அந்தந்த துறையின் வாயிலாக திட்டங்களை செயல்படுத்துவதே ஆகும்.

அதன்படி, இன்று வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மண்டலங்களைச் சேர்ந்த அலுவலர்கள், வணிகர்கள் ஆகியோர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று நடைபெற்றது. தற்போதைய ஆட்சி பொறுப்பேற்றதற்கு பின் நடைபெறும் 5வது மண்டலகுழுகூட்டம் இதுவாகும்.

இக்கூட்டத்தில் பல்வேறு வணிகர்களிடம் பல்வேறு கருத்துக்கள் பெறப்பட்டதுடன். ஜி.எஸ்.டி வரிதொடர்பான அவர்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகளை குறிப்பெடுத்து, அவற்றினை ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், வணிவரித்துறை அலுவலர்களின் செயல்பாடு வணிகர்களை ஊக்குவித்து, அவர்களை சிறப்பான வணிகம் செய்யக்கூடியாதாக விளங்கச் செய்யவேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

வணிகவரித்துறை அலுவலர்களின் பணிகள் துறைஉயர் அலுவலர்களால் தொடர்ந்து கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. பறக்கும்படையில் சோதனை செய்பவர்கள் குறிப்பிட்ட நபர்கள் மட்டுமல்லாமல், அதேநிலையில் அனைத்து அலுவலரைகளையும் களஆய்விலும் ஈடுபடுத்த இந்த நடவடிக்கைகள் எடுப்பது குறித்து பரிசீலித்து வருகிறோம். வணிக நலவாரியம் அமைப்பது தொடர்பாக உறுப்பினர்கள் சேர்க்கையினை இணையதளம் வாயிலாக மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளதுடன், சிறு வணிகர்களும் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளும் வகையில் எளிய முறையில் தமிழிலேயே பதிவு செய்யும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோலவே, பத்திரப்பதிவு துறையில் வெளிப்படைத்தனைமையை உறுதி செய்திடும் வகையிலும், தலைமை அலுவலகத்திலிருந்து அனைத்து பத்திரப்பதிவு அலுவலகங்களை கண்காணிக்கும் வகையிலும் பத்திரப்பதிவுதுறை தலைமை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வழங்கப்பட்டுள்ள தெலைப்பேசி எண்களில் பெறப்படும் புகார்களுக்கு உடனடி

நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு தீர்வு கண்டு வருகின்றார்கள்.

அதுமட்டுமின்றி பத்திரபதிவு துறையில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்னும் எளிமைப்படுத்தும் வகையில், போலிபதிவுகள், ஆள்மாறட்டம் இல்லாமல் நேர்மையாக பதிவுகள் நடப்பதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பத்திரவுபதிவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **என மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்**